بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 14/11/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்கள் மற்றும் அப்போர்களில் அன்னாரின் வாழ்க்கை வரலாறு பற்றி கடந்த குத்பாக்களில் கூறப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, தபூக் போரின் விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டு வந்தன. இது பற்றிய மேலும் விவரம் என்னவென்றால், இந்தத் தருணத்தில் ஒரு பெண்மணி மிகுந்த கலப்பற்ற தன்மையையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தினார்.

இதைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: படை சிரியாவை நோக்கி செல்ல வேண்டி இருந்ததாலும், மூத்தா போரின் காட்சி முஸ்லிம்களின் கண்களுக்கு முன்னால் இருந்ததாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயிரைப் பாதுகாக்கும் எண்ணம், ஒவ்வொரு முஸ்லிமின் இதயத்திலும் மற்ற எல்லா எண்ணங்களைக் காட்டிலும் முதன்மையானதாக இருந்தது. பெண்கள் முதற்கொண்டு இந்த ஆபத்தை உணர்ந்து தங்கள் கணவர்களையும் மகன்களையும் போருக்கு செல்லுமாறு வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

இந்த மனத்தூய்மையையும் ஆர்வத்தையும் எவ்வாறு கணிக்க முடிகிறது என்றால், ஒரு நபித்தோழர் ஏதோ பணிக்காக வெளியூர் சென்றிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படையுடன் மதீனாவிலிருந்து புறப்பட்ட பிறகு அவர் திரும்பி வந்தார். நீண்ட நாள் பிரிவுக்குப் பிறகு அவர் தம் மனைவியைக் கண்டு மகிழ்ச்சி அடைவார் என்ற எண்ணத்துடன் வீட்டிற்குள் நுழைந்தபோது, அவர் தம் மனைவி முற்றத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டார். அன்பைப் பரிமாறிக்கொள்ள முன்னோக்கிச் சென்றார். அவர் மனைவிக்கு அருகில் சென்றதும்,

அவருடைய மனைவி இரு கைகளாலும் அவரைத் தள்ளி பின்னுக்குத் தள்ளி விட்டு, ‘உங்களுக்கு வெட்கமாக இல்லையா? அல்லாஹ்வின் தூதர் அந்த ஆபத்தான இடத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார். நீங்கள் உங்கள் மனைவியுடன் அன்பு செலுத்த துணிகிறீர்களே! முதலில் சென்று உங்கள் கடமையை செய்யுங்கள். அதன் பிறகு மற்ற விஷயங்களைப் பார்க்கலாம்’ என்று கூறினார்.

அந்த சஹாபி உடனடியாக வீட்டை விட்டு வெளியேறி, தம் பயண விலங்குக்கு சேனமிட்டு, மூன்று நாள் பயணத் தொலைவில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய மற்ற தோழர்களுடன் மதீனாவிற்குத் திரும்பிய போதுதான் அவர் வீட்டிற்குத் திரும்பினார்.

சுருங்கச் சொல்லின், இவர்கள் ஒவ்வொரு ஆபத்தான நேரத்திலும் தங்கள் உயிரைப் பற்றி சற்றும் கவலைப்படாமல் அதை ஆபத்தில் ஆழ்த்தியவர்கள் ஆவர். அவர்களுக்கு ஏற்பட்ட எந்த ஒரு துன்பமும் துயரமும், அவர்களுக்குத் துன்பம், துயரமாக தோன்றவேயில்லை. மாறாக, தொண்டு செய்யவதற்கான வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் அவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் உயிரை தியாகம் செய்தனர்.

எவ்வாறு இருப்பினும், இதன் கூடுதல் விவரங்களில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 15 அல்லது 19 இடங்களில் தங்கிய பிறகு, தம் சஹாபிகளுடன் தபூக்கை அடைந்ததாக எழுதப்பட்டுள்ளது. தபூக்கிற்கான இந்தப் பயணத்தில் எங்கெங்கு முகாமிட்டார்கள் என்பது பற்றி தனி விவரம் கிடைப்பதில்லை; எனினும், பின்னர் அந்த இடங்களில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. அந்தப் பள்ளிவாசல்களுக்கு அந்த இடங்களின் பெயர்களே வைக்கப்பட்டன. எனவே, வரலாற்று ஆசிரியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த இடங்களில்தான் தங்கியிருப்பார்கள் என்று விளக்கம் அளித்துள்ளார்கள்.

ஒரு ஹதீஸில், ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாங்கள் தபூக் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் புறப்பட்டோம். ஒரு நாள் இரவு நபி (ஸல்) அவர்கள் உறங்கிவிட்டார்கள். மேலும், சூரியன் ஒரு ஈட்டி உயரத்திற்கு வந்த பிறகுதான் அன்னார் விழித்தெழுந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள், “பிலாலே! ஃபஜ்ருக்காக காத்திருங்கள் என்று நான் உங்களிடம் சொல்லவில்லையா?” என்று கேட்டார்கள். {அதாவது, விழித்திருந்து எங்களை எழுப்புங்கள் என்று கூறியிருந்தார்கள்.}

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், 'யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} தங்களைப் போலவே எனக்கும் உறக்கம் வந்துவிட்டது' என்று பணிவுடன் பதிலளித்தார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்: நபி (ஸல்) அவர்கள் படைக்கு புறப்பட உத்தரவிட்டார்கள். பிறகு சிறிது தொலைவு பயணித்த பிறகு, அன்னார் பயண விலங்கிலிருந்து இறங்கி சுன்னத் தொழுகைகளை நிறைவேற்றினார்கள். பிறகு, சஹாபிகளுக்குத் தொழுகை நடத்தினார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஒரு பகல், ஓர் இரவு முழுவதும் பயணம் செய்து, அடுத்த நாள் காலையில் தபூக்கை அடைந்தார்கள்.

தபூக்கை அடைந்த பிறகு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் புகழையும் தூய்மையையும் எடுத்துரைத்துவிட்டு சஹாபிகளுக்கு உரை நிகழ்த்தினார்கள். அனைத்தையும் உள்ளடக்கிய அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு துஆ செய்தார்கள்: "அல்லாஹ்வே! என்னையும் என் சமுதாயத்தையும் மன்னிப்பாயாக. அல்லாஹ்வே! என்னையும் என் சமுதாயத்தையும் மன்னிப்பாயாக. அல்லாஹ்வே! என்னையும் என் சமுதாயத்தையும் மன்னிப்பாயாக" நபி (ஸல்) அவர்கள் இதை மூன்று முறை திரும்பத் திரும்பக் கூறினார்கள். பின்னர், "நான் எனக்காகவும் உங்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்" என்று கூறினார்கள்.

இந்தத் தருணத்தில் ஹிராக்லியஸுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்கும் கடிதம் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. ஹிராக்லியஸிடம் கடிதம் கொடுக்கப்பட்டபோது, அவர் அதை படித்துவிட்டு, 'நீங்கள் உங்கள் நபியிடம் சென்று நான் அவரை பின்பற்றுபவன் என்று சொல்லுங்கள். ஆனால் நான் என் பேரரசை விட்டுவிட விரும்பவில்லை' என்று கூறினார். அவர் சில தினார்களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு (பரிசாக) அனுப்பினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இதைப் பற்றி கூறப்பட்டபோது அன்னார், "அவர் பொய் சொல்லியிருக்கிறார்" என்று கூறி அந்த தினார்களை மக்களிடையே வினியோகித்தார்கள்.

வரலாற்றில், ஐலா மக்களுடன் சமரசம் செய்யப்பட்டதற்கான குறிப்பும் காணப்படுகிறது. தபூக்கில் தங்கியிருந்தபோது ஐலாவின் ஆட்சியாளரும், அவருடன் சிரியா, ஏமன், பஹர், ஜர்பா மற்றும் அஸ்ருஹ் ஆகிய பகுதிகளின் மக்களும் வந்து சமரசத்தை வேண்டினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு ஒரு அமைதி பத்திரத்தை எழுதிக் கொடுத்தார்கள்.

பின்னர் மக்னாவின் யூத மக்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கும் ஒரு அமைதி பத்திரத்தை எழுதி கொடுத்தார்கள்.

தபூக் போருடன் தொடர்புடைய ஒரு சிறுபடை பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. இது ஹஸ்ரத் ஃஹாலித் பின் வலீத் (ரலி) அவர்கள் உகைதர் பின் அப்தில் மலிக் என்பவரை நோக்கி சென்ற சிறுபடை ஆகும். இந்தக் கோட்டை தபூக்கிலிருந்து 400 கி.மீ. தொலைவில் இருந்தது. உகைதிர் பனு கிந்தா கோத்திரத்தைச் சேர்ந்த கிறித்தவ அரசர் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்களிடம், "இரவு நேரத்தில் அவர் ஒரு காட்டு மாட்டை வேட்டையாடிக் கொண்டிருக்கும் போது அவரை நீர் காண்பீர். அப்போது நீர் அவரைப் பிடித்துக்கொள்வீராக!" என்று கூறினார்கள்.

மேலும் கூறினார்கள்: "அல்லாஹ் உமக்காக தூமாவை வெல்லச் செய்வான். நீர் அவர் மீது மேலோங்கிய பிறகு, அவரைக் கொன்று விடாதீர், அவரை என்னிடம் அழைத்து வாரும். அவர் மறுத்து சண்டையிட்டால், பிறகு, அவரைக் கொன்று விடுவீராக" என்று கூறினார்கள். ஆக, அப்படியே நடந்தது. {அதாவது, அவர் சரணடைந்து விட்டார்.}

தபூக் போரின் தருணத்தில், நபித்தோழர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் ஸூல் பிஜாதைன் முஸ்னீ (ரலி) அவர்களது வஃபாத் மற்றும் நல்லடக்கம் பற்றியும் குறிப்பு கிடைக்கிறது. இதைக் கண்ட பெரிய சஹாபிகள் சிலர், இந்த அடக்கம் செய்யப்படுபவர் இடத்தில் தாம் இருந்திருக்க வேண்டுமே என்று விரும்பினார்கள். இவ்வாறே ஹஸ்ரத் முஆவியா பின் முஆவியா முஸ்னீ (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகை பற்றிய குறிப்பும் இந்தப் பயணத்தினுடைய குறிப்பில் காணப்படுகிறது.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தபூக்கில் இருந்தபோது, ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து, யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} முஆவியா முஸ்னீ மதீனாவில் வஃபாத் ஆகி விட்டார். அவரது ஜனாஸா தொழுகையைத் தாங்கள் நடத்துங்கள் என்று கூறினார்கள். பிறகு, ஆன்மிகக் காட்சியில் அவரது ஜனாஸா வைக்கப்பட்டிருந்த அந்தக் கட்டில் காற்றில் உயர்த்தப்பட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களுக்கு முன்னால் வந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகையை நிறைவேற்றினார்கள். அன்னாருக்கு முன்னால் வானவர்களினுடைய வரிசைகளும் இருந்தன.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம், “இந்தப் படித்தரம் அவருக்கு எப்படிக் கிடைத்தது?” என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ சூரா மீது அவர் கொண்டிருந்த அன்பு காரணமாகத்தான். அவர் நிற்கும்போது, அமரும்போது, பயணவிலங்கில் இருக்கும்போது, நடந்து செல்லும் போது என அனைத்து நிலைகளிலும் அதை ஓதி வந்தார்” என்று பதிலளித்தார்கள்.

தபூக்கை அடைந்த பிறகு, மேலும் முன் னேறுவது குறித்து நபி (ஸல்) அவர்கள் சஹாபிகளுடன் ஆலோசனை செய்ததற்கான குறிப்பும் கிடைக்கிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், “யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} ரோமானியர்களிடம் அதிகமான படைகள் உள்ளன. இவர்களில் இஸ்லாமியர்கள் யாரும் இல்லை. நாம் அவர்களுக்கு அருகில் வந்துவிட்டோம். தாங்கள் அருகில் வந்ததே அவர்களை அச்சுறுத்தி விட்டது. நாம் இந்த ஆண்டு திரும்பிச் சென்று விடுவோம். ஒரு முடிவுக்கு வருவோம். அல்லது அல்லாஹ் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவான்” என்று பணிவுடன் கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், இதை கேட்ட பிறகு நபி (ஸல்) அவர்கள் தபூக்கில் 20 நாள்கள் தங்கியிருந்த பிறகு, திரும்பிச் செல்ல முடிவெடுத்தார்கள். வேறொரு கூற்றின்படி, அன்னார் 20 நாள்களுக்கும் குறைவாகவே தபூக்கில் தங்கியிருந்தார்கள். மதீனாவிலிருந்து புறப்பட்டு மீண்டும் மதீனாவுக்குத் திரும்பி வருவதற்கு இரண்டு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் எடுத்தது. மதீனாவிற்குத் திரும்பி வந்த பயணம் பற்றிய விளக்கம் மற்றும் விவரங்கள் எதிர்வரும் காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* நான் இதற்கு முன்னரும் வங்காள தேசத்திற்காக துஆ செய்யுமாறு கூறியிருந்தேன். அங்கு அஹ்மதிய்யத்திற்கு எதிரானவர்கள் அதிக கூச்சலிட்டு வருகின்றனர். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் அவர்களுடைய தீங்கிலிருந்து பாதுகாப்பானாக. அதேபோன்று பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் பாதுகாப்பானாக. இப்பொழுது மிக அதிக துஆக்கள் தேவைப்படுகின்றன. அதேபோன்று பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். போர் நிறுத்த ஒப்பந்தம் ஆன பிறகும், அவர்கள் அதேபோன்று படுகொலை செய்யப்படுகிறார்கள். அல்லாஹ் கருணை காட்டுவானாக.

அவ்வாறே ஆப்பிரிக்க அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் மீதும் சில இடங்களில் அரசாங்கங்கள் அநீதியிழைக்கின்றன. சில இடங்களில் பயங்கரவாதிகள் பல்வேறு இடங்களில் தாக்குதல் நடத்துகின்றனர். சில நேரங்களில் அஹ்மதிகளும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். அல்லாஹ் உலகெங்கிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவானாக. (ஆமீன்)

*கடைசியில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ரப்வாவைச் சேர்ந்த முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களின் மகன்* ***முஹம்மது ஹுஸைன் சாஹிப்*** *அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். மேலும், அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவித்தார்கள். மர்ஹூம் அவர்களின் பாவமன்னிப்புக்காகவும், உயர்ப்படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ

سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا

عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ

وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**